# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2037/20 - 2017 සැප්තැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.09.21
2037/20 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மத்திய மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கல்வி நியதிச்சட்ட ஒழுங்குவிதிகள்*

**வடமத்திய மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கல்வி நியதிச்சட்டம்**

வடமத்திய மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கல்வி நியதிச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் வடமத்திய மாகாண முதலமைச்சரும் வடமத்திய மாகாண சட்டமும் ஒழுங்கும், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விசேட கருத்திட்டங்கள், சுற்றுலாத்துறை, கல்வி, தகவல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கலாசார விடயப்பொறுப்பு அமைச்சருமான நான், பின்வரும் கட்டளைகளை இத்தால் விதிக்கின்றேன் என்பதை அறிவிக்கின்றேன்.

பேஷல ஜயரத்ன பண்டார,
முதலமைச்சர் மற்றும் கல்வி விடயப் பொறுப்பு அமைச்சர்.

முதலமைச்சரின் அலுவலகம்,
2017, செத்தெம்பர் 01.

கட்டளைகள்

**01. மாகாண பாடசாலைகளுக்கு வசதிகளை பெற்றுக்கொடுத்தல் :**

I. வமத்திய மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் கட்டமைப்பு பற்றிய பிரதான திட்டம் ஒன்று இருத்தல் வேண்டும். இந்த திட்டத்தின் கீழ் பாடசாலைக் கட்டிடங்களின் அமைவிடம், அவ்வவ் கட்டிடங்களின் கீழ் உள்ள ஒவ்வொரு பிரிவுகளும் அமைந்துள்ள முறை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்காக பிரேரிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் அதில் விசேடமாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

II. குறித்த பாடசாலையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய மாகாண கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பதிவேடு பிரதான நிர்வாக அலகுகளினுள் சலரும் பார்வையிடக்கூடியவாறு காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1A - PG 3696 — 57 (2017/09)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

III. மேற்படி பதிவேட்டுக்கமைய பதவியணியினரை பேணிவருவதற்கு அதிபர் உறுதியாக பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

IV. பாடசாலை வகைப்படுத்தலுக்கு அமைய தமது பாடசாலைக்கு அவசியமான சகல பௌதீக மற்றும் மனிதவளங்கள் தொடர்பிலுமான தேவைகளை அதிபர் பாடசாலை அபிவிருத்திக் குழுவுடன் இனங்கண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி தேவைகள் வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

02. **பாடசாலைகளின் கண்காணிப்பு நடவடிக்கைகள்** :

I. பாடசாலைகளின் கண்காணிப்பு நடவடிக்கைகள் போதியளவில் மற்றும் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அதற்காக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை அமுல்படுத்தல் வேண்டும்.

II. ஒவ்வொரு கோட்டக் கல்விப் பணிப்பாளரும் தமது கோட்டத்துக்குரித்தான பாடசாலைகளை கண்காணிப்புச் செய்வதற்கு வருடாந்தத் திட்டம் ஒன்றை தயார்செய்தல் வேண்டும். மேற்படி திட்டம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பிரதி சகிதம் தமது கோட்டத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலையினதும் அதிபர்களுக்கு முன்னதாக பெற்றுக்கொள்ளல் வேண்டுமென்பதுடன் மேற்படி திட்டத்திற்கு அமைய கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

III. ஒவ்வொரு பாடசாலையிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் தனித்தனியாக கண்காணிப்புச் செய்யப்படல் வேண்டும்.

(அ) பாடசாலையின் கற்பித்தல் நடவடிக்கைகள் ;

(ஆ) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வருகை ;

(இ) தவணைக் குறிப்புக்கள், அச்சுப் புத்தகங்களை பயன்படுத்துதல் ;

(ஈ) பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நடவடிக்கைகள் ;

(உ) பாடசாலை சூழல் ;

(ஊ) உரிய பாடம் சம்பந்தமான மற்றும் பாடவிதானத்திற்குப் புறம்பான இலக்குகளை அடைந்து கொள்ளல் ;

(எ) பாடசாலை நிதிக் கட்டுப்பாடு ;

(ஏ) ஆசிரியர்கள் மற்றம் மாணவர்களின் செயலாற்றுகை மட்டம்.

IV. கண்காணிப்பு நடவடிக்கைகள், தற்போதுள்ள சகல பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் மேற்கொள்வதற்கு உரிய சகல அலுவலர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதுடன் சேவைசார் நாட்குறிப்பில் அதுபற்றிய குறிப்புக்கள் விழிக்கப்படல் வேண்டும்.

V. பாடசாலைகளை கண்காணிப்புச் செய்வது தொடர்பாக கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைத்தொகுப்பு மற்றும் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தரநியமங்களை ஏற்புடையதாக்கிக்கொள்ளல் வேண்டும்.

VI. கோட்டப் பணிப்பாளர்கள் பாடசாலைகள் சம்பந்தமான இந்தத் திட்டத்திற்கு மேலதிகமாக அவசரக் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஒவ்வொரு பாடசாலையையும் உள்ளடக்கும் வகையில் ஒவ்வொரு கல்வித் தவணையிலும் ஒரு தடவை மேற்கொள்ளல் வேண்டும்.

VII. வலயக்கல்விப் பணிப்பாளர்களினால் தமது வலயத்திற்கு உரித்தான சகல வட்டார பணிப்பாளர்களினதும் கடமை நடவடிக்கைகள் கண்காணிப்புச் செய்யப்படல் வேண்டும். இதற்காக வருடாந்த திட்டம் ஒன்று தயார்செய்யப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக திடீர் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

VIII. மாகாணக் கல்விப் பணிப்பாளர் அடுத்துவரும் ஆண்டுக்கான கண்காணிப்புத் திட்டத்தை தயார்செய்து விடயப்பொறுப்பு அமைச்சரின் முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் குறித்த ஆண்டின் நவம்பர் 15ஆந் திகதிக்குள் வலய மற்றும் வட்டாரக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக சகல அதிபர்களுக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

IX. மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் வலய மற்றும் வட்டாரங்களை கண்காணிப்புச் செய்வதற்கான திட்டம் தயார்செய்யப்படல் வேண்டும் என்பதுடன் இது வருடாந்தம் தயாரிக்கப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக தேவையானவாறு திடீர் கண்காணிப்புகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**03. ஆசிரியர் சேவை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய சேவைகளுக்கு ஆட்களை ஆட்சேர்ப்புச் செய்தல் :**

I. அரசியலமைப்பின் 17வது உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் 1990ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்த) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ள 1987ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய மாகாண அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

II. ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது அங்கீகரிக்கப்பட்டுள்ள வடமத்திய மாகாண ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்புக்கு அமையவும் ஏனைய சேவைகளுக்கு ஏற்புடைய ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகளுக்கு அமையவும் ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும்.

III. மாகாண சபை அரசாங்க சேவைக்கு இரண்டாம் நிலைப்படுத்தப்படுவதன் அடிப்படையில் நியமனம் பெறுகின்ற ஆசிரியர்கள் தொடர்பாக மாகாண அதிகாரிகளினால் குறித்த பதவிக்கு நியமனம் செய்வது தொடர்பாக எழுத்து மூலமான சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு அதனை மேற்கொள்ளல் வேண்டும்.

IV. ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது கட்டாய பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். மேற்படி பாடசாலைகளில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் இவர் சேவையாற்ற வேண்டும்.

**04. அதிபர்களை நிலையங்களுக்கு இணைத்தல் :**

I. மாகாண சபைக்கு விடுவிக்கப்பட்டுள்ள அதிபர் ஒருவரை சேவை நிலையம் ஒன்றுக்கு நியமனம் செய்யும்போது சேவை முதுமை, திறமை மற்றும் வெளிப்படுத்தியுள்ள ஆற்றல்களைக் கொண்டு வெற்றிகரமான பதவிக்கு இணைப்புச் செய்தல் வேண்டும்.

II. யாதாயினும் ஒரு கல்லூரியில் அதிபர் பதவியொன்று வெற்றிடமாகும் பட்சத்தில் மாகாணத்தில் உள்ள தரம் பெற்றுள்ள அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரி நேர்முகப் பரீட்சையை நடாத்தி அதில் உச்சத் தகைமைகளைக் கொண்டுள்ள அதில் திறமைகளைப் பெற்றுக்கொள்ளும் அலுவலரை அப்பதவிக்கு நியமனம் செய்தல் வேண்டும்.

III. எவ்வாறாயினும் ஒரு பாடசாலையின் அதிபர் பதவி வெற்றிடம் திடீரென ஏற்படும் பட்சத்தில் நிரந்தர தரத்தைச் சேர்ந்த அதிபர் ஒருவரை நியமனம் செய்யும்வரை குறித்த வெற்றிடமாக உள்ள பதவிக்கு தற்காலிக அடிப்படையில் அதிபர் ஒருவரை நியமனம் செய்வதற்கு மேற்படி ஏற்பாடுகள் தடையாக இருத்தலாகாது.

IV. அதிபர் வெற்றிடங்களுக்கான நேர்முகப் பரீட்சையை நடாத்தும் குழு பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ;

(ஆ) மாகாண கல்விப் பணிப்பாளர் ;

(இ) குறித்த வித்தியாலயம் அமைந்துள்ள வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் ;

(ஈ) மேலதிக கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்).

V. வருடாந்த அதிபர் இடமாற்றங்கள் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**05. கல்வித்துறை தொடர்பான சகல ஆட்களையும் இடமாற்றம் செய்தல் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டப்பாடு.**- கல்வித்துறை சம்பந்தமான சகல அலுவலர்களினதும் இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அரசியலமைப்பு மற்றும் 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் வடமத்திய மாகாண சபையின் அரசாங்க சேவை நடவடிக்கைமுறை விதிகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

**06. மாகாணக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தை தயார்செய்தல் :**

I. மாகாணக் கல்வி அபிவிருத்தித் திட்டம் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பிரேரணைகளுக்கு அமைய முன்னய ஆண்டின் ஒற்றோபர் முப்பத்தொராம் (31) திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தயார்செய்யப்படல் வேண்டும் என்பதுடன் இது மூன்று வருடகாலத்திட்டமாக இருத்தல் வேண்டும். தயார்செய்யப்படுகின்ற மூன்று வருடத்திட்டம் மாகாண அமைச்சுச் செயலாளரினால் மாகாணக் கல்வி விடயப்பொறுப்பு அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

II. மூன்று வருட மாகாணக் கல்வித் திட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டுக்கும் வருடாந்த கல்வி அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயார்செய்யப்பட்டு அது ஒவ்வொரு முன்னைய ஆண்டும் நவம்பர் மாதம் 30ஆந் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரிடம் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் செயலாளரின் சிபாரிசு சகிதம் குறித்த திட்டத்திற்கு விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

III. கோட்ட மற்றும் வலய அபிவிருத்தித் திட்டம் முன்னர் குறிப்பிடப்பட்ட திகதிகளுக்கு அமைய மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் அமைச்சுச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**07. வலய, கோட்ட மற்றும் பாடசாலை மட்டத்திலான கல்வி அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தல் :**

I. அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று வருட மற்றும் வருடாந்த மாகாணக் கல்வி அபிவிருத்தி திட்டங்களுக்கு ஏற்புடையவாறு ஒவ்வொரு வலயங்களுக்கும் மூன்று வருட மற்றும் வருடாந்த வலயக் கல்வி அபிவிருத்தி திட்டங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனையின் பேரில் வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் தயார்செய்யப்படல் வேண்டும்.

II. அங்கீகரிக்கப்பட்ட மூன்று வருட மற்றும் வருடாந்த மாகாண கல்வி அபிவிருத்தி திட்டங்களுக்கு ஏற்புடையவாறு ஒவ்வொரு கல்விக் கோட்டத்திற்கும் மூன்று வருட மற்றும் வருடாந்த கோட்டக் கல்வித் திட்டங்கள் வலயக் கல்விப் பணிப்பாளரின் அறிவுரைக்கு அமைய கோட்டக் கல்விப் பணிப்பாளர்களினால் தயார்செய்யப்படல் வேண்டும்.

III. அங்கீகரிக்கப்பட்ட மூன்று வருட வருடாந்த மாகாணக் கல்வி அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்புடையவாறு ஒவ்வொரு பாடசாலைக்கும் என மூன்று வருட மற்றும் வருடாந்த கல்வி அபிவிருத்தி திட்டங்கள் பாடசாலை அபிவிருத்திக் குழுவினதும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதாக கோட்டக் கல்விப் பணிப்பாளரின் அறிவுரைக்கு அமைய அதிபரினால் தயார்செய்யப்படல் வேண்டும்.

IV. பாடசாலை மட்டத்தில் தயார்செய்யப்படுகின்ற வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் ஒவ்வொரு முன்னைய ஆண்டும் நவம்பர் மாதம் 15ஆந் திகதிக்கு முன்னரும் மூன்று வருட திட்டங்கள் ஒற்றோபர் மாதம் 31ஆந் திகதிக்கு முன்னரும் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு அதிபர் பாடசாலையினுள் அமுல்படுத்தல் வேண்டும்.

V. மாகாண, வலய, கோட்ட மற்றும் பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தும்போது மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் ஏற்புடையவாறு தமது கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளுக்கு தனிப்பட்ட வகையில் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

**08. பதவியணி மதிப்பீடு :**

I. மாகாணக் கல்வித் திணைக்களம் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை மதிப்பீடு செய்வதை ஒவ்வொரு வருடமும் யூலை 15ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளல் வேண்டும்.

II. அதிபரின் வேலை நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யும்போது மாகாணக் கல்வித் திணைக்களம் பாடசாலைக்கு வழங்கியுள்ள வருடாந்த இலக்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா, பாடசாலையின் ஒட்டுமொத்தக் கல்விசார் முன்னேற்றம் எவ்வாறானது என்பது பற்றி அமைச்சின் செயலாளரினால் நியமனம் செய்யப்படுகின்ற குழு வருடாந்தம் மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதுடன் அது சம்பந்தமான அறிக்கை செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

III. ஒவ்வொரு பாடசாலையிலும் 1 ஆம், 2 ஆம் மற்றும் 3ஆம் தவணைப் பரீட்சைகளின் புள்ளிகள் ஒவ்வொரு தரத்திற்கும் என ஒவ்வொரு பாடத்தின் கீழும் பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வவ் பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியரின் செயலாற்றுகை மற்றும் முன்னேற்றம் மேற்படி பகுப்பாய்வு மற்றும் ஏற்புடையவாறு தேசிய பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

IV. அதிபரினால் இந்தப் பகுப்பாய்வு ஒவ்வொரு வருட இறுதியிலும் 3 ஆம் தவணையில் பாடசாலை விடுமுறைக்கு முன்னர் வலயப் பணிப்பாளருக்கு பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டுமென்பதுடன் வலயக் கல்விப் பணிப்பாளரினால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் உரிய பெறுபேறுகளின் பகுப்பாய்வுகளுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் மாகாணக் கல்வி அமைச்சுக்கு சனவரி 30 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட ஆவணங்களின் சரியான தன்மையை ஆராய்ந்த பின்னர் தகுந்தவாறு ஒவ்வொரு வருடமும் யூலை 15 ஆந் திகதிக்கு முன்னர் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை மதிப்பீடு செய்வது மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

V. மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஒவ்வொரு பாடசாலைக்கும் வருடாந்தம் வழங்கப்படுகின்ற பெறுபேறு இலக்குகள் குறித்த ஆண்டில் அடையப்பட்டுள்ளதா இல்லையா என்பது பற்றியும் அடையப்பெறவில்லை எனின் அதற்குத் தாக்கம் செலுத்தியுள்ள காரணங்கள் யாவை என்பது பற்றியும் அறிக்கை ஒன்றை அடுத்துவரும் ஆண்டின் மே மாதம் 30ஆந் திகதிக்கு முன்னர் செயலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**09. சேவைசார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் :**

I. தேவையான பாடங்களுக்கு வதிவிடப் பயிற்சிகளை தொடர்ச்சியாக நடாத்தல் வேண்டும்.

II. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இனங்காணப்பட்டுள்ள பாடங்களுக்கு வதிவிடப் பயிற்சி முகாம்களை நடாத்த வேண்டும்.

III. மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31ஆந் திகதிக்கு முன்னர் அடுத்த ஆண்டுக்கான வளவாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி பதிவுசெய்துகொண்டிருத்தல் வேண்டும். வளவாளர்களின் குழுமத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் குறித்த பாடத்திற்கு பட்டப் பின்படிப்பு அல்லது அதற்கு அண்மித்த மட்டத்திலான தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

IV. சகல ஆசிரியர் பயிற்சி நடவடிக்கைகளும் பாடசாலைக் கல்விச் செயன்முறைக்கு தடை ஏற்படுத்தாத வகையில் நடாத்துவதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

***10. தவணைப் பரீட்சைகள் :***

I. ஒவ்வொரு பாடசாலையிலும் தவணைப் பரீட்சைகளை நடாத்துவது பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) முதலாவது தவணைப் பரீட்சை பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளல் ;

(ஆ) இரண்டாவது தவணைப் பரீட்சையை வலய மட்டத்தில் அல்லது மாகாண மட்டத்தில் மேற்கொள்ளல் ;

(இ) இறுதித் தவணைப் பரீட்சையை மாகாண மட்டத்தில் நடாத்துதல்.

II. ஒவ்வொரு தவணைப் பரீட்சைக்குமான வினாத்தாள்களை தயார்செய்தல், தட்டெழுத்து செய்தல், அச்சிடல், விநியோகித்தல், விடைத்தாள்களை தயார்செய்தல், புள்ளிகளை பகுப்பாய்வு செய்வது தொடர்பாக பாடசாலை, வலயம், மாகாண மட்டத்தில் கண்காணிப்புக் குழுக்களை நியமனம் செய்தல் வேண்டும்.

III. தவணைப் பரீட்சை வினாத்தாள்களை தயார்செய்வதற்காக ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 15ஆந் திகதிக்கு முன்னர் வினாத்தாள் தயார்செய்யும் குழு கோட்ட, வலய மற்றும் மாகாணக் மட்டத்தில் தாபித்தல் வேண்டும். வினாத்தாள் குழுவை ஒழுங்கு செய்வதானது மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தியின் பொறுப்பாகும் என்பதுடன்) மேலுள்ள சகல நடவடிக்கைகளையும் கண்காணிப்புச் செய்வது மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாக இருக்கும்.

IV. குழு அலுவலர்கள் பரீட்சை தவறுகள் தொடர்பில் பொறுப்புக்கூறல் வேண்டும்.

V. மாகாண மட்டத்தில் நடாத்தப்படுகின்ற தவணைப் பரீட்சைகளுக்கு இயங்கும் குழு ஒழுங்கமைப்பானது கோட்டக் கல்விப் பணிப்பாளர், வலய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளுக்கு இயங்கும் குழு ஒழுங்கமைப்பு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மாகாண மட்டத்தில் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளுக்கான குழுவின் ஒழுங்கமைப்பு மாகாணக் கல்விச் செயலாளரினாலும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

VI. மாணவர்களுக்கு ஒவ்வொரு தவணைப் பரீட்சையின்போது அவ்வவ் பாடங்களுக்கு தாம் பெற்றுக்கொண்ட புள்ளிகளை உள்ளடக்கிய முன்னேற்ற அறிக்கையை பெற்றுக்கொடுப்பது தவணை இறுதி விடுமுறையை வழங்கமுன்னர் மேற்கொள்ள ஒவ்வொரு அதிபரும் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

VII. மேற்படி சகல பரீட்சை நடவடிக்கைகளையும் வழிநடாத்துவதானது மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர் மாகாண பணிப்பாளரின் அறிவுரையின் பேரில் மேற்கொள்ளல் வேண்டும்.

***11. பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் நடாத்தப்படுகின்ற பல்வேறு போட்டிகளுக்கு நடுவர் குழுக்களை பயன்படுத்திக் கொள்ளும்போது பின்வருமாறு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் :***

I. கோட்ட மட்டத்தில் நடாத்தப்படுகின்ற போட்டிகளுக்கான நடுவர் குழுவுக்கு வெளிக் கோட்டங்களில் சேவையாற்றுகின்ற கல்விப் பதவியணியினருக்கு உரித்தானவர்கள் அல்லது பாடநிபுணர்களில் இருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

II. வலயத்தினுள் நடாத்தப்படுகின்ற போட்டிகளுக்கு வெளி வலயங்களில் சேவையாற்றுவோரை பயன்படுத்திக் கொள்ளல்.

III. மாகாண போட்டிகளுக்கு மாகாணத்தின் இரண்டு மாவட்டங்களின் பிரதிநிதிகள் மற்றும் வெளி மாகாணம் ஒன்றின் பிரதிநிதிகள் சமமாக உள்ளடங்கும் வகையில் தேர்தெடுத்தல் வேண்டும்.

**12. முறையான, முறைசாரா மற்றும் விசேட கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் :**

I. முறையான, முறைசாரா கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும்போது தேசிய ரீதியில் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற வைபவங்கள், பல்வேறு கொண்டாட்டங்கள் தொடர்பான அறிவிப்புகளுக்கு அமைய மாகாணப் பாடசாலைகளும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

II. மாகாணத்திற்கு தனித்துவமிக்க வைபவங்களை நடாத்துவதை வருடாந்த நாட்காட்டியில் உள்ளடக்கி முன்னறிவுரை வழங்கி மேற்படி வைபவத்தை நடாத்துவதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செயற்படல் வேண்டும்.

III. விடய ரீதியான விடயங்களுக்கு சமாந்தரமான நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய மற்றும் மாகாணக் கொள்கைகள், சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் இது மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**13. சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் :**

I. ஏதாவது ஒரு பாடசாலைக்கு நலன் விரும்பிகள் ஏதும் அன்பளிப்புக்களைச் செய்திருப்பின் வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

II. ஏதேனும் ஒரு பாடசாலையின் அதிபர் பாடசாலைக்கு உரித்தான சகல கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களையும் பராமரிப்புச் செய்து முறையாக பேணி வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

III. அரசாங்க அல்லது மாகாண சபைகளின் ஏற்பாடுகளின் அடிப்படையில் ஏதேனும் ஒரு பாடசாலையில் தேவையுள்ள கற்பித்தல் உதவிகள், உபகரணங்கள், செவிப்புல மற்றும் கற்புல உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள், கணினி மற்றும் ஏனைய ஏதேனும் ஒரு தேவை தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முன்னைய ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதிக்கு முன்னர் அறிவித்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க அல்லது மாகாண சபைகளின் ஏற்பாடுகளின் அடிப்படையில் பாடசாலைகளின் தேவைகளுக்கு தேவையான கற்பித்தல் உபகரணங்கள், கற்புல மற்றும் செவிப்புல உபகரணங்கள், பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு தேவையான விஞ்ஞான உபகரணங்களை பெற்றுக்கொள்வது ஒவ்வொரு வருடமும் யூன் மாதம் 30ஆந் திகதிக்கு முன்னர் குறித்த கோரிக்கைகள் மாகாணப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வலயக் கல்விப் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அடுத்துவரும் ஆண்டின் முதலாவது தவணை நிறைவடையும் முன்னர் குறித்த உபகரணங்களை பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு மாகாணக் கல்விச் செயலாளர் முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

V. ஒவ்வொரு பாடசாலைக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு பொருத்தமானவாறு ஒரு நூலகத்தை பேணிவருதல் வேண்டும் என்பதுடன் அதற்கப் பொறுப்பாக நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய அனைத்துச் சந்தர்ப்பத்திலும் நூலகம் சம்பந்தமான அறிவைக் கொண்டுள்ள ஆசிரியர் ஒருவரை ஈடுபடுத்தல் வேண்டும்.

VI. ஆகக்குறைந்தது ஒவ்வொரு மாணவரும் ஒரு வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நேரமேனும் நூலகத்தைப் பயன்படுத்தக்கூடிய வகையில் பாடசாலையின் நேர அட்டவணையை தயார்செய்தல் வேண்டும்.

VII. பாடசாலை, கோட்டம், வலயம், மாகாண மட்டத்தில் வாசிப்புத் தினப் போட்டிகளை வருடாந்தம் நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

*14. கோட்ட மற்றும் வலயக் கல்வி அலுவலக எல்லைகளை நிர்ணயித்தல், மாகாணக் கல்வி அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற ஒரு குழுவின் சிபாரிசுகளை கவனத்தில் கொண்டு அமைச்சர் தீர்மானித்தல் வேண்டும்.*

*15. மாகாணப் பொது தேவைகளின் அடிப்படையில் மாகாணப் பாடசாலைகளுக்கு அவசர விடுமுறைத் தினங்களை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தீர்மானிக்க முடியும்.*

*16. பரீட்சைப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்த பின்னர் கற்பித்தலில் பின்னடைவான மாணவர்களுக்கு கல்வி பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை அதிபர் அமுல்படுத்த வேண்டும் என்பதுடன் உரிய கோட்ட மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளல் வேண்டும்.*

*17. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் மாகாணக் கல்விப் பணிப்பாளர் மாகாணப் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான மருத்துவ பரிசோதனை, சிகிச்சை வழங்குவது சுகாதார மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்* போன்றவற்றை திட்டமிட வேண்டும் என்பதுடன் மாகாணக் கல்விச் செயலாளர் மேற்படி விடயங்களை ஒழுங்குறுத்தல் வேண்டும். ஒவ்வொரு பாடசாலைக்குள்ளும் சுகாதார சமூகம் ஒன்றை தாபித்தல் வேண்டும்.

*18. கல்வி விடயப் பொறுப்பு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கொள்கைகள் மற்றும் தர நியமங்களுக்கு அமைய மாகாணப் பாடசாலைகளை தரப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல், புதிய பாடசாலைகளை திறந்துவைக்க நடவடிக்கைகளை* மேற்கொள்ளல் வேண்டும்.

***19. வடமத்திய மாகாணத்தினுள் பாடசாலைக் கல்வி பெறுகின்ற மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை நடாத்தல் :***

I. *பாடசாலை மாணவர்களுக்கு வெளி மேலதிக வகுப்புக்களை நடாத்துகின்ற நிறுவனங்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கான தகவுதிறன் மாகாண கல்விப் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவு திறன்களுக்கு உட்பட்டு மேற்படி நிறுவனத்தினால்* பேணிவரப்படல் வேண்டும்.

II. *பாடசாலை நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு தினமும் 14.00 மணிவரை ஞாயிற்றுக்கிழமைகளில் 14.00 மணிவரையும் பௌர்ணமி தினம் மற்றும் விசேட சமய மற்றும் தேசிய வைபவங்களின்போதும் வடமத்திய மாகாணத்தினுள் பாடசாலை மாணவர்களுக்கு தனியார் மேலதிக வகுப்புக்கள் எந்தவகையிலும் நடாத்தப்படக்கூடாது.*

III. இந்த நியமங்கள் வெளி மேலதிக வகுப்புகளை நடாத்துவதற்கு ஊக்குவிப்பாக இருக்காது என்பதுடன் *கற்பிப்பதன் தர நியமங்களை பாதுகாத்தல், ஒழுக்கம் மற்றும் தார்மீக ரீதியான நடத்தையின் கீழ் முறையான மாணவர் கல்வியைப் பேணிவருவதற்காக ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.*

IV. இந்த விதிகளை மீறுகின்ற பாடசாலை மாணவர்களுக்கு தனியார் மேலதிக வகுப்புக்களை நடாத்தும் *ஆட்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது அதற்கு ஊக்கமளிக்கின்றவர்கள் இதன்கீழ் தவறிழைத்துள்ளதாக கருதப்படுவதுடன் தத்துவமுள்ள நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் ரூபா 50,000 ற்கு குறையாத தண்டப்பணம் அல்லது மூன்று மாதத்திற்கு குறையாத தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட முடியும்.*

V. *யாராயினும் ஒரு ஆசிரியர் அல்லது கல்விப் பதவிணியைச் சேர்ந்த ஒருவர் அல்லது அரசாங்க சேவையிலுள்ள அலுவலர் ஒருவர் பாடசாலை நேரத்திற்குள் தனிப்பட்ட லீவைப் பெற்றுக்கொண்டு மேலதிக வகுப்புக்களில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவாராயின் அவர் தவறிழைத்தவராக கருதப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் ஒழுக்காற்று அதிகாரியிடம் அதுபற்றி அறிக்கையிடல் வேண்டும்.*

VI. ஒவ்வொரு தினமும் காலை 7.00 மணிக்கு முன்னர் மற்றும் இரவு 7.00 மணிக்குப் பின்னர் பாடசாலை *மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் நடாத்துவதை எவ்விதத்திலும் மேற்கொள்ளக்கூடாது என்பதுடன் அது சிறுவர் தொந்தரவு அல்லது சிறுவர் உரிமை மீறலாக கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படல்* வேண்டும்.

VII. யாராயினும் ஒரு மாணவர் பாடசாலை நேரத்தினுள் பாடசாலைக்கு வருகை தராது மேலதிக வகுப்புக்களில் பங்கேற்பது வெளிப்படுத்தப்படுமாயின் மேற்படி மாணவர் அல்லது மாணவிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை அதிபர் மேற்கொள்ளல் வேண்டும்.

VIII. தேசிய பரீட்சைகளில் தோற்றுகின்ற மாணவர்களின் வருகை சராசரி தேசிய கொள்கைக்கு அமைய 80%மாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இதனை பூர்த்தி செய்யாத மாணவர்களுக்கு உரிய பாடவிதானம் நிறைவுசெய்யப்படாத மாணவர்களாக கருதி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்படக்கூடாது. இந்த வருகை பற்றி கணிப்பிடுவதானது கற்கை தவணை மட்டத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**வடமத்திய மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை :**

20. வடமத்திய மாகாண கல்விச் செயன்முறை மென்மேலும் உற்பத்தித்திறன்மிக்கதாக்கும் பொருட்டும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலன்புரிக்காகவும் பொருத்தமானவாறு ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்தல் வேண்டும்.

21. வடமத்திய மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்துவதானது 1987ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் அதன் விளைவாந்தன்மை கொண்ட ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

**22. வடமத்திய மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்தம்போது பின்வரும் விடயங்கள் அதன் நோக்கங்களாக இருத்தல் வேண்டும் :**

I. கல்வியானது அனைத்து சந்தர்ப்பங்களிலும் மாணவர்களை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதனால் ஆசிரியர்களின் இடமாற்றங்களை வழங்கும்போது மாணவர்களின் தேவைகளை முன்னுரிமையானதாக கருதுதல் வேண்டும்.

II. ஆசிரியர்களின் தொழில்சார் பாதுகாப்பு தொடர்பிலான நம்பிக்கையை உறுதிசெய்யும் வகையிலும் நியாயமற்ற இடமாற்றம் பற்றிய அநாவசியமான அச்சமின்றியும் சேவையாற்றக்கூடிய வகையில் சேவைசார் திருப்தியை உச்சளவில் உரித்தாக்கிக்கொள்ளக்கூடியவாறு இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

III. கல்வி தொடர்பாக வடமத்திய மாகாணத்தில் காணப்படுகின்ற முரண்பாடுகளை முடிந்தளவுக்கு குறைப்பது ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் பிரதான நோக்கமாக இருத்தல் வேண்டும்.

IV. யாதாயினும் ஒரு கல்வி வலயத்தில் கோட்டம் அல்லது பாடசாலைக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ள மனித வளத்தை மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களில் வசிக்கின்ற மாணவர்களுக்கு பயன்மிக்கவாறு ஆசிரியர் சேவையில் ஈடுபட்டள்ள மனிதவளத்தை நியாயமானவாறு பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் ஆசிரிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

V. கல்வியின் தரமான தன்மையை வளர்க்கும் பணி தங்கியிருப்பது ஆசிரியர்களின் அறிவு மற்றும் திறமையிலாகும் என்பதனால் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் மூலம் ஆசிரியர்களுக்கு தமது அறிவையும் திறனையும் வளர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும்.

VI. பிரதேசத்தில் ஏற்புடைய துறையில் மனிதவளங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் உச்சளவான வினைத்திறனை நோக்கி இந்தக் கொள்கையை அறிமுகம் செய்யப்படல் வேண்டும்.

VII. யாராயினும் ஒரு ஆசிரியருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறான அண்மித்த சந்தர்ப்பம் ஒன்றில் மேற்படி ஒழுக்காற்று நடவடிக்கையை இலகுபடுத்தகின்ற இடமாற்றமொன்று தவிர வேறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆசிரியர் சேவையில் இடமாற்றங்கள் முறையானவாறு தாபிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் இடமாற்றச் சபையின் சிபாரிசின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

VIII. யாராயினும் ஒரு ஆசிரியருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள அண்மித்ததொரு சந்தர்ப்பத்தில் ஆசிரியர் சேவையின் தேவையின் அடிப்படையில் மிக அவசரமான மற்றும் விசேடமான சந்தர்ப்பங்களில் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைக்கு அமைய சுகாதார காரணங்களின் அடிப்படையில் அல்லது வாழ்க்கைத்துணையின் இடமாற்றம் மற்றும் நட்புறவான இடமாற்றங்கள் தவிர எல்லா சந்தர்ப்பத்திலும் ஆசிரியர்களின் இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டியது முறையாக தாபிக்கப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்றக் குழுவின் மூலமாகும். மேற்படி விசேட காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் ஆசிரியர் இடமாற்றக் குழுவை ஒன்றுகூட்டி அதுபற்றி ஆசிரியர் இடமாற்றக் குழுவுக்கு அறிந்துகொள்வதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

IX. வருடாந்த இடமாற்றலுக்கு அட்டவணை 01 இன் கீழுள்ள ஏ படிவமும் அதற்குப் புறம்பான கோரிக்கைகளுக்கு பி படிவமும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

X. பூர்த்தி செய்யப்பட்ட ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரரினால் அதிபரின் சிபாரிசுடன் வலயப் பணிப்பாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும். மேற்படி விண்ணப்பம் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பது வலயக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

XI. சேவைசார் இணைப்புச் செய்தல்கள் எவ்விதத்திலும் மேற்கொள்ளப்படல் கூடாது.

கர்ப்பமடைந்துள்ள பெண்களுக்கு சுற்றறிக்கைகளுக்கு அமைய இணைப்புச் செய்தல் இடமாற்றக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

XII. வலய ஆசிரியர் இடமாற்றக் குழு ஒவ்வொரு மாதமும் 3ஆம் வாரம் வெள்ளிக்கிழமைகளில், மாகாண ஆசிரியர் இடமாற்றக் குழுக்கள் ஒவ்வொரு மாதமும் 4ஆம் வாரம் வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் ஒன்றுகூட்டப்படல் வேண்டும்.

XIII. எந்தவொரு பாடசாலையிலும் ஆசிரியர்களில் மிகை ஏற்படாத வகையில் ஆசிரியர்களின் இடமாற்றறங்களை மேற்கொள்வதற்கு மிக தீவிரமான பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**23. இடமாற்றங்களுக்கு பின்வரும் தகைமைகள் காணப்படல் வேண்டும் :**

I. சகல வகையிலுமான இடமாற்றங்களுக்கு முதல் நியமனம் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் மீள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

II. மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த புள்ளிகளின் மட்டம் மற்றும் காலம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**24. பாடசாலை வகைப்படுத்தலானது பின்வறுமாறு அமைதல் வேண்டும். தேசிய மற்றும் மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்தும் தேவையின் அடிப்படையில் காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்படுகின்ற பாடசாலை வகைப்படுத்தல்கள் அவ்வவ் சந்தர்ப்பங்களில் ஏற்புடையதாக்கிக்கொள்ளப்படல் வேண்டும்.**

(1) மிகவும் விருப்பத்திற்குரிய பாடசாலைகள் ;

(2) விருப்பத்திற்குரிய பாடசாலைகள் ;

(3) விருத்திற்குரியதல்லாத பாடசாலைகள் ;

(4) பின்தங்கிய பாடசாலைகள் ;

(5) மிகவும் பின்தங்கிய பாடசாலைகள்.

**25. மாகாண ஆசிரியர் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான குழுவினால் பெயரிடப்படுகின்ற பாடசாலையொன்றில் கட்டாயமான ஆகக்குறைந்த சேவைக்காலத்தை ஒவ்வொரு ஆசிரியரும் சேவையாற்றியிருத்தல் வேண்டும். அதற்கமைய-**

(1) மிகவும் பின்தங்கிய அல்லது பின்தங்கிய பாடசாலை ஒன்றில் - 03 வருடங்கள் (ஆகக்குறைந்தது)

(2) விருப்பத்திற்குரியதல்லாத ஒரு பாடசாலையில் - 04 வருடங்கள் (ஆகக்குறைந்தது)

(3) விருப்பத்திற்குரிய பாடசாலையொன்றில் - 05 வருடங்கள் (உச்சளவாக)

(4) மிகவும் விருப்பத்திற்குரிய பாடசாலையொன்றில் - 05 வருடங்கள் (உச்சளவாக)

**26. இடமாற்றம் வழங்குவது தொடர்பில் புள்ளி வழங்குகின்ற முறை பின்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும் :**

I. இடமாற்றம் வழங்கும்போது வடமத்திய மாகாணத்தில் உள்ள கல்வி கோட்டங்கள் பிரதானமாக இரண்டு பகுதிகளாக பிரித்து நோக்கப்படுகின்ற கெபிதிகொல்லாவ வலயம், திம்புலாகொல வலயம், ஹிங்குராகொட வலயம், மெதிரிகிரிய கோட்டம், எலஹெர கோட்டம் மற்றும் அநுராதபுர வலயத்தில் உள்ள விலச்சிய கோட்டம் மற்றும் கலின்பிந்துனுவெவயில் உள்ள கலின்பிந்துனுவெவ கோட்டம் ஆகியன ஒரு தொகுதிக்கு உரித்தானவையாகும். இந்த வலயங்களுக்கு உரித்தான பாடசாலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு புள்ளி வழங்கப்படும்.

A

| பாடசாலை வகை | ஒரு வருடத்திற்கான புள்ளிகள் |
|---|---|
| மிகவும் பின்தங்கிய | 10 |
| பின்தங்கிய | 08 |
| ஏனைய பாடசாலைகள் | 05 |

II. வடமத்திய மாகாணத்திலுள்ள ஏனைய கல்வி கோட்டங்கள் சமமானதாக கருதப்படுவதுடன் அந்த கோட்டங்களில் சேவையாற்றிய காலத்திற்கு பின்வருமாறு புள்ளி வழங்கப்படும்.

B

| பாடசாலை வகை | ஒரு வருடத்திற்கான புள்ளி |
|---|---|
| பின்தங்கிய | 07 |
| மிகவும் பின்தங்கிய | 08 |
| விருப்பத்திற்குரியதல்லாத | 05 |
| விருப்பத்திற்குரிய | 03 |
| மிகவும் விருப்பத்திற்குரிய | 02 |

III. மேலே (1) மற்றும் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக ஒரு தடவை மாத்திரம் கணிப்பிடப்படுகின்றவாறு திருமணம் செய்திருப்பின் மேலதிகமாக இரண்டு புள்ளிகளும் 07 வருடங்களுக்கு குறைவான சிறுவர்கள் இருப்பின் ஒரு பிள்ளைக்கு மேலதிகமாக இரண்டு புள்ளி வீதமும் வழங்கப்படும். மொத்தச் சேவைக்காலத்திற்கு ஒரு வருடத்திற்கு ஒருபுள்ளி வீதம் உரித்தாகும். மேலும்

மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கும்போது 05 வருடங்களைவிட அதிகரிக்கின்ற மாகாணங்களுக்கிடையிலான விண்ணப்பதாரருக்கு ஒரு வருடத்திற்கு ஒருபுள்ளி வீதம் உரித்தாகும். மாகாணத்தினுள் 10 வருடங்களுக்கும் மேலான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள ஆசிரியர்களுக்கு இடையிலான இடமாற்றங்களை வழங்கும்போது மேற்படி புள்ளி முறையை ஏற்புடையதாக்கிக்கொள்ளக்கூடாது.

IV. இடமாற்றம் செய்யப்படுகின்ற புள்ளி வரையறைகள் மாகாண ஆசிரியர் இடமாற்றக் குழுவினால் காலத்திற்கு ஏற்ற வகையில் தீர்மாணிக்கப்படும். எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் வேறு மாகாணம் ஒன்றுக்கு ஆசிரியர்கள் இணைப்புச் செய்யப்படக்கூடாது.

27. I. அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பதவிணி பதிவேட்டுக்கு அமைய குறித்த பாடங்களுக்கு குறித்துரைக்கப்பட்ட கால அட்டவணை இல்லாத ஆசிரியர்கள் மிகையானவர்களாக கருதப்படல் வேண்டும் என்பதுடன் அதிபரினால் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டு அவர் வலயத்தில் உள்ள அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் வலயங்களுக்கிடையே காணப்படுகின்ற வெற்றிடங்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு மேற்படி ஆசிரியர்களை உடனடியாக இடமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

II. *மிகை ஆசிரியர் இடமாற்றங்கள்.*- மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்படி புள்ளி வழங்கும் ஒழுங்குமுறையின் மூலம் மேலதிக ஆசிரியரை அல்லது ஆசிரியர்களை இனங்காண வேண்டும். ஆகக்குறைந்த புள்ளியைப் பெறுகின்ற ஆசிரியர் அல்லது ஆசிரியர்கள் மிகையாகக் கருதப்படல் வேண்டும். யாதாயினும் ஒரு கல்வி வலயத்திற்கு உரித்தான பாடசாலையொன்றில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில் அந்த பாடத்திற்கே அதே வலயத்தில் மற்றொரு பாடசாலையில் ஆசிரியர் மிகையாகக் காணப்படுமாயின் அதனை சமப்படுத்துவதற்கு வலய இடமாற்றக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒரு வலயத்தில் ஏதேனும் ஒரு பாடம் தொடர்பில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்ற நிலைமையில் மற்றொரு வலயத்தில் அதே பாடத்திற்கு ஆசிரியர் மிகையாகக் காணப்படுமாயின் மேற்படி மிகையை சமப்படுத்துவதற்கு வலயங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

III. தான் மிகை ஆசிரியர் என்பதை அறிந்துகொண்டே கடமையை மேற்கொள்ளாது சம்பளம் பெற்றுக்கொள்ளும் குற்றத்திற்கு குறித்த ஆசிரியருக்கு எதிராக ஒழுக்காற்று அல்லது சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒழுக்காற்று அதிகாரி செயற்படல் வேண்டும். அவ்வாறே மிகை ஆசிரியர்களை வைத்திருப்பது தொடர்பாக அதிபர், கோட்டக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் குற்றமிழைத்திருப்பதாக கருதி குறித்த தரப்பினர்களுக்கு ஒழுக்காற்று மற்றும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**28. இடமாற்றல் சபை :**

I. இடமாற்றங்களை நோக்கமாகக் கொண்டு ஆசிரியர் இடமாற்றல் குழு தாபிக்கப்படல் வேண்டும்.

II. ஆசிரியர் இடமாற்றல் குழு பின்வரும் மட்டங்களில் தாபிக்கப்படல் வேண்டும் :-

(அ) வலய இடமாற்றல் குழு ;

(ஆ) வலயங்களுக்கிடையிலான மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றல் குழு.

**29. ஆசிரியர் இடமாற்றல் குழுவின் ஒழுங்கமைப்பு :**

(1) *வலய ஆசிரியர் இடமாற்றக் குழு.*- வலய ஆசிரியர் இடமாற்றக் குழுவின் தவிசாளராக வலயக் கல்விப் பணிப்பாளர் செயற்படல் வேண்டும். அவ்வாறின்றேல் அவரினால் பெயரிடப்படுகின்ற பிரதிநிதி ஒருவர் இருத்தல் வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளர் தவிசாளர் பதவிக்குப் பெயரிடுகின்ற பிரதிநிதிக்கு மேலதிகமாக மேலும் இரண்டு பிரதிநிதிகள் ஆசிரியர் இடமாற்றக் குழுவுக்கு பெயரிடப்படல் வேண்டும்

என்பதுடன் தாபன நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் அதில் ஒருவராக இருத்தல் வேண்டும். முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் இவ்விருவரில் ஒருவர் தமிழ் மொழி மூலமான அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள செல்லுபடியான தொழிற்சங்கங்களினால் பெயரிடப்படுகின்ற பிரதிநிதி ஒருவர் விகிதமும் உள்வாங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

செயலாளராக உதவிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) நியமனம் செய்யப்படல் வேண்டும்.

(2) *வலயங்களுக்கிடையிலான மற்றும் மாகாணங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றல் குழு -*

(அ) மாகாணக் கல்விப் பணிப்பாளர் (தவிசாளராக) இருத்தல் வேண்டும்.

(ஆ) மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் நிர்ணயிக்கப்படுகின்ற பிரதிநிதிகள் இரண்டு பேர் இருத்தல் வேண்டுமென்பதுடன் இவ்விருவரில் ஒருவர் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தாபன நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பணிப்பாளராக இருக்க வேண்டும் என்பதுடன் முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பெயரிடுகின்ற அலவலர்கள் இருவரில் ஒருவர் தமிழ் மொழி மூலமான விடயங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளராக இருத்தல் வேண்டும்.

(இ) *தொழிற்சங்க பிரதிநிதிகள்.-* தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்திற்கு அமைய தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்கள்.

(ஈ) வலயங்களுக்கிடையிலான மற்றும் மாகாணங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றக் குழுவின் செயலாளராக மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் (நிரவாகம்) இருத்தல் வேண்டும்.

(3) வலயங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றக்குழு, மாகாணங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றக்குழு தொடர்பிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(4) (I) * விண்ணப்பம் கோரல் - மே மாதம் முதல் வாரம் முதல் யூன் மாதம் 30 வரை.

* வலயங்களுக்கிடையிலான மற்றும் மாகாணங்களுக்கிடையிலானது – செத்தெம்பர் மாதம் 30 வரை பட்டியல்களை வெளியிடல்.

* வலயங்களுக்குள் ஆசிரியர் இடமாற்றப் பட்டியல் - ஒற்றோபர் மாதம் 30.

* மேன்முறையீட்டுச் சபை – நவெம்பர் மாதம் 30.

(II) வருடாந்த இடமாற்றங்களுக்கான விண்ணபங்கள் ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதலாம் வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டு யூன் மாதம் 30 ஆந் திகதி அளவில் நிறைவுசெய்யப்படல் வேண்டும் என்பதுடன் நவம்பர் மாதம் 30ஆந் திகதியளவில் இடமாற்றங்களுக்கான பட்டியல்களை வெளியிடல் வேண்டும்.

**30. மேன்முறையீட்டுச் சபை :**

I. ஆசிரியர் இடமாற்றக் குழுவின் தீர்மானத்தில் திருப்தியடையாத ஆசிரியர்கள் மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பிக்க முடியும்.

II. வலய மட்டத்திலான மேன்முறையீட்டு சபையின் தவிசாளராக மாகாணப் பணிப்பாளர் இருத்தல் வேண்டும் என்பதுடன் வலயங்களுக்கு இடையிலான மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான மேன்முறையீட்டுச் சபைகளின் தவிசாளர்கள் மாகாணக் கல்விச் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் இருப்பார்

என்பதுடன் அவரினால் பெயரிடப்படுகின்ற மேலும் பிரதிநிதிகள் இருவர் உள்ளடக்கப்படல் வேண்டும். மேற்படி அலுவலர்கள் இரண்டு பேரில் ஒருவர் இடமாற்றல் சபையில் சேவையாற்றிய ஒருவராக இருத்தல் வேண்டும். மற்றையவர் இடமாற்றச் சபையில் சேவையாற்றாத ஒருவராக இருத்தல் வேண்டும். வலய இடமாற்ற மேன்முறையீட்டு சபையின் ஒழுங்கமைப்பும் இவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்.

III. தொழிற்சங்கங்கள் அனைத்துக்குமாக ஒரு பிரதிநிதியை பெரும்பாண்மை தொழிற்சங்கங்களின் விருப்பத்தின்பேரில் தேர்ந்தெடுத்தல் வேண்டும். தொழிற்சங்கக் கட்டளைச் சட்டத்திற்கு அமைய பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

**31. தகவல்களை சேகரித்தல் மற்றும் கூட்டங்களை அறிக்கையிடல் :**

* ஆசிரியர் இடமாற்றக் குழு மற்றும் மேன்முறையீட்டு சபையின் கூட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் குழுச் செயலாளரினால் குறித்துக்கொள்ளப்பட்டு அறிக்கையிடப்படல் வேண்டும்.

* வருடாந்த இடமாற்றங்கள் இணையத்தளத்தின் ஊடாக மென்பொருள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**32. அதிபர்களை வருடாந்தம் இடமாற்றம் செய்வதானது அதிபர் இடமாற்றக் கொள்கைக்கு அமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.**

**33. தார்மீகமான நடத்தை பற்றிய ஆசிரியர் ஒழுக்கநெறிக்கோவை :**

தார்மீகமான நடத்தை பற்றிய ஆசிரியர் ஒழுக்கநெறிக்கோவையில் பரந்தளவில் உள்ளடங்கியிருப்பது தமக்கு விதித்துக்கொள்ள வேண்டிய நேர்மை, பொறுப்பு, நேரடியாக செயற்படும் தன்மை முன்மாதிரியான சமூகப் பொறுப்பைக் கொண்ட ஆட்கள் என்ற வகையில் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற மனப்பாங்கு, பொறுப்புக்கள் மற்றும் நடத்தை முறைகளாகும். இது தொடாபான துறைகள் பின்வருமாறு காணப்படல் வேண்டும்.

(1) *ஆசிரியர் ஆளொருவர் என்ற வகையில் -*

நன்னடத்தை, ஒழுக்கம், நன்னடத்தையைக் கொண்ட முன்மாதிரியான சமூக வழிநடத்துநராக ஆசிரியரிடமிருந்து பின்வரும் சமூக எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றிக்கொள்ளப்படல் வேண்டும் :-

(அ) தாம் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கத் தேவையான நடைமுறைகளை பின்பற்றி உடல்சார் நிலைபேறான தன்மை மற்றும் சுத்தமான தன்மை பற்றிய நியமங்களை பின்பற்றல்.

(ஆ) அனைத்துச் சந்தர்ப்பத்திலும் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் பாதுகாக்கக்கூடிய வகையில் கலாசாரத்திற்கு ஏற்புடையவாறும் சுத்தமாகவும் எளிமையாகவும் நல்ல முறையில் தயார்செய்யப்பட்ட ஆடைகளை அணிந்திருத்தல்.

(இ) மதுபானம் மற்றும் போதைவஸ்து பயன்பாடு, புகைபிடித்தல், வெற்றிலை போன்ற மோசமான பழக்கங்கள் மற்றும் பல்வேறு துர்நடத்தைகளில் இருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் ஏனையவர்களுக்கு அவ்வாறு தவிர்ந்திருக்க ஊக்கமளித்தல்.

(ஈ) தனிப்பட்ட மற்றும் சமூக நடத்தை தொடர்பாக அபகீர்த்திக்கு உள்ளான ஆட்களுடன் பழகாதிருத்தல்.

(உ) தாம் பழகும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனையவர்களின் முன்னிலையில் தமது செல்வந்த நிலைமை, குடும்பத் தொடர்புகள் மற்றும் உயர் பதவிகளை வகிக்கும் ஆட்களுடனான பழக்கம் பற்றி பெருமைப்படாதிருத்தல்.

(ஊ) தமது செல்வம், குடும்ப தொடர்புகள் மற்றும் உயர் பதவிகளை வகிக்கும் ஆட்களுக்குள்ள நட்புறவு ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வேறு ஆட்களை அச்சுறுத்துவதற்கோ அல்லது அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடனோ பயன்படுத்தாதிருத்தல் மற்றும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளும் ஆட்களின் முன்னிலையில் மனஉறுதியுடன் நடந்துகொள்ளல்.

(எ) தமது தனிப்பட்ட வாழ்க்கையின் நோக்கு மற்றும் சமயம், அரசியல் கருத்து போன்ற விடயங்கள் தொடர்பில் தமது தனிப்பட்ட கருத்துக்களை அங்கீகரிப்பதற்கு மாணவர்களை ஊக்குவிப்பதிலிருந்து தடுத்தல்.

(ஏ) தனிப்பட்ட கடப்பாடுகளின் அடிப்படையில் மாணவர்களின் மீது பதில் நடவடிக்கை மேற்கொள்ளாதிருத்தல்.

(ஐ) மாணவர்களுக்கு உள ரீதியாக தொல்லை கொடுக்கும் வகையில் அநாவசியமான செய்கைகளை வெளிப்படுத்தாதிருத்தல்.

(ஒ) ஏதேனும் ஒரு பாடம், மொழி அல்லது வேறு துறைதொடர்பில் தமக்குள்ள விசேட ஆற்றல்ககளை ஏனைய ஆசிரியர்களை கண்டிப்பதற்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது.

(ஓ) கருத்துக்கள் மிக்க ஆட்களின் முன்னிலையில் தீவிரமாக இருக்காதிருத்தல் மற்றும் தீவிரவாத நிலைப்பாட்டில் இருந்து வெளியேறி சமநிலையான ஆளொருவராக நல்ல முறையில் நடந்து கொள்ளல்.

(ஔ) அநீதியான, முறையற்ற விதத்தில் ஓரங்கட்டல் மற்றும் பயமுறுத்தல் போன்றவற்றிலிருந்து எதிர்காலத்தில் தமது சகோதர ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வேறு ஒருவரை பாதுகாத்துக்கொள்ள அனைத்து சந்தர்ப்பத்திலும் ஆயத்தமாக இருத்தல்.

(க) வகுப்பறையில் மற்றும் அதற்கு வெளியே மாணவர்களுடன் செயற்படும் சந்தர்ப்பங்களில் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துவதில் இருந்து தவிர்ந்திருத்தல்.

(கா) அனைத்து சந்தர்ப்பங்களிலும் சமூக நியமங்களுக்கு மதிப்பளித்து பழக்கவழக்கங்கள், நல்ல நடைமுறைகள் மற்றும் தனித்துவம் போன்ற சகல வகையிலும் பிள்ளைகள் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திற்கு முன்மாதிரியாக நடந்துகொள்ளல்.

(கி) மனிதர்கள் மற்றும் விலங்குகள் தொடர்பான குரூரமான நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் தமது உணர்வை வெளிப்படுத்தி செயற்படல் மற்றும் இயற்கையான மற்றும் மனிதர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளினால் அல்லது உதாசீனத்தன்மை, கவயீனம் காரணமாக அல்லது பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் கருணையை வெளிப்படுத்தி உதவி ஒத்தாசை புரிதல்.

(2) ஆசிரியர் பெற்றோர் சார்பாக –

பாடசாலை மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர்கள் மாணவர்களின் அந்த இடத்திலுள்ள பெற்றோர் எனும் சட்டரீதியான எண்ணக்கருவை கவனத்தில் கொண்டு,

(அ) அனைத்து சந்தர்ப்பத்திலும் மற்றும் மாணவர்கள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கையை பாதுகாத்தல் மற்றும் பெற்றோர் பாதுகாவலர்கள் தொடர்பில் பிள்ளைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

(ஆ) குளம், நம்பிக்கைகள், பால்நிலை, சமூக அந்தஸ்து, சமயம், மொழி, பிறந்த இடம் ஆகிய காரணிகளை பொருட்படுத்தாது சகல மாணவர்களுக்கும் நியாயமாகவும் பக்கச்சார்பின்றியும் அன்பு, கவனம் மற்றும் பாதுகாப்பை பெற்றுக்கொடுத்தல்.

(இ) தமது மாணவர்களுக்கு அவர்களின் பெயரில் அல்லது மகள், மகன் என்று மாத்திரம் அவர்களை அழைத்தல்.

(ஈ) மாணவர்கள் மத்தியில் காணப்படக்கூடிய விசேட தேவைகள், சிக்கல்கள் தொடர்பில் கவனமாக இருத்தல் மற்றும் அவ்வாறான மாணவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுப்பதற்கும் தேவையானவாறு நிபுணத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல்.

(3) *ஆசிரியர் அறிவைப் பெற்றுக்கொடுப்பவராக, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்பவராக இருத்தல் -*

அறிவைப் பெற்றுக்கொடுத்தல், திறமை மற்றும் நல்ல மனப்பாங்கை விருத்தி செய்வதை ஆசிரியரின் அடிப்படைப் பொறுப்பொன்றாக கருதி, ஆசிரியர் பின்வருமாறு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் :-

(அ) ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு அமைய சிறுவர்களுக்கு உரித்தான உரிமைகளை உறுதிசெய்யக்கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

(ஆ) எல்லா சந்தர்ப்பத்திலும் சிறந்த ஆயத்தத்துடன் தமது பொறுப்புக்களை நிறைவேற்றல்.

(இ) வழங்கப்படுகின்ற அறிவு சரியானதாக உள்ளமை மற்றும் ஏற்புடையதாக உள்ளமை, மாணவர்களுக்கு பொருத்தமாக உள்ள தன்மையை உறுதிசெய்தல்.

(ஈ) பாடங்களை கற்பிப்பது தொடர்பான பூரணத்துவமிக்க அணுகுமுறை ஒன்றைப் பின்பற்றுதல்.

(உ) கற்பிக்கும் காலப்பகுதிக்குள் கேள்வி கேட்பதற்கு மற்றும் கலந்துரையாடுவதற்கு ஊக்குவிப்பதற்கு மாணவர்களின் விமர்சன ரீதியான சிந்தனையை வளர்த்துக்கொள்ள வாய்ப்பை உருவாக்கிக்கொடுத்தல்.

(ஊ) பாடம் சம்பந்தமான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளத் தேவையான மாணவர்களுக்கு அதற்கான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய முறையியல்களை தெளிவுபடுத்துதல் மற்றும் தம்மிடம் மேலதிக தகவல்களை வினவுவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொடுத்தல்.

(எ) மாணவர்கள் சுய கற்கைக்கு ஊக்குவிக்கத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல் விசேடமாக மாணவர்களை வாசிப்பதற்குத் தூண்டுதல்.

(ஏ) மாணவர்களின் மனப்பாங்கை அபிவிருத்தி செய்பவராக மற்றும் அதற்கு தூண்டுபவராக செயற்படுதல்.

(ஐ) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது மாணவர்களிடம் பணம் அறவிட்டுக்கொண்டு கற்பிக்காதிருத்தல்.

(4) *ஆசிரியர் ஆக்கபூர்வமான வழிகாட்டுநராக மற்றும் ஆலோசகர் ஒருவராக,*

ஆக்கபூர்வமான வழிகாட்டுபவராக மற்றும் ஆலோசகராக தமது பொறுப்பின்கீழ் கொண்டுவரப்படுகின்ற மாணவர்களுக்கு பெறுமதிமிக்க சேவையொன்றை ஆசிரியர் நிறைவேற்ற வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு,

(அ) மேற்படி பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அறிவு, திறமைகள் மற்றும் நல்ல மனப்பாங்குகளைக் கொண்டவாறு நல்ல முறையில் ஆயத்தமாதல்.

(ஆ) மாணவர்களிடம் இருக்க வேண்டிய பலவீனங்கள் மற்றும் சிக்கல்கள் தொடர்பில் கவனமாக இருக்க வேண்டும் என்பதுடன் அவ்வாறான சிக்கல்களை தீர்த்துவைக்கத் தேவையான நிபுணத்துவ ஆலோசனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

(இ) மாணவர்கள் தொடர்பிலான பலவீனங்கள் மற்றும் சிக்கல்கள் பற்றிய இரகசியமான தகவல்களை அந்த மாணவர்களின் பெற்றோர் மற்றும் சட்டபூர்வமான பாதுகாவலர்கள் தவிர வேறு ஆட்களிடம் வெளிப்படுத்தாதிருத்தல்.

(ஈ) பெற்றோருடன் நட்புறவான தொடர்பைப் பேணிவருவதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு தமது பிள்ளைகள் தொடர்பான சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்கு தம்மிடம் இலகுவாக வருகை தருவதற்கான வாய்ப்பைச் செய்துகொடுத்தல்.

(உ) எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆசிரியர் மாணவர் தொடர்பை முறையற்ற விதத்தில் பயன்படுத்திக்கொள்ளாதிருத்தல் மற்றும் மாணவர்களை துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதற்கான சந்தர்ப்பங்களில் இருந்து தடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.

(ஊ) எல்லா சந்தர்ப்பத்திலும் மாணவர்களின் அறிவு, திறமை மற்றும் சமூக நற்பண்புகளை விருத்தி செய்ய மேற்கொள்ளல்.

(5) *ஆசிரியர் மதிப்பீடு செய்பவராக,*

மதிப்பீடு மற்றும் கணிப்பிடுதல், கற்பித்தல், கற்றல் செயன்முறையின் முக்கியதொரு அம்சமாக கருதப்பட்டு ஆசிரியர்–

(அ) அடிக்கடி அதற்குத் தேவையான அறிவை இற்றைப்படுத்திக்கொள்ளல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தமது அறிவு, திறமை, மனப்பாங்கை அபிவிருத்தி செய்துகொள்ளல்.

(ஆ) மாணவர்கள் மத்தியில் காணப்பட வேண்டிய கற்கைசார் பலவினங்கள் மற்றும் சிக்கல்கள் தொடர்பில் கவனமாக இருந்து அவற்றுக்குத் தீர்வுகளை வழங்குவதற்குத் தேவையான நிபுணத்துவ ஆலோசனை உள்ளடங்கலாக சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

(இ) மாணவர்கள் தொடர்பில் எந்தவொரு பேதமும் அல்லது ஆட்களுடன் சம்பந்தப்பட்டதாக இன்றி வெளிப்படைத் தன்மையுடனும் நம்பகத் தன்மையையும் கட்டியெழுப்பக்கூடிய வகையில் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(6) *ஆசிரியர் தொழில்சார் வல்லுநராக,*

கோட்பாடுசார் அறிவு மற்றும் திறமைகளை அடைந்து கொள்வதன் காரணமாக ஆசிரியர் தொழில்சார் வல்லுநராக கருதப்படுவதனால்,

(அ) ஆசிரியர் தொழிலுக்குத் தனித்துவமிக்க உயர் சம்பிரதாயங்கள் உன்னத தன்மைகளை அனைத்து சந்தர்ப்பங்களிலும் பாதுகாத்தல்.

(ஆ) தமது தொழில்சார் அறிவு, திறமைகளை உயர்மட்டத்தில் பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.

(இ) கற்பித்தலை தொழில்வாண்மையாகவும் சேவையொன்றாகவும் கருதுவது, தங்கியிருப்பது ஆசிரியர் சமுதாயத்தில் தேவையான அறிவு, ஆற்றல், மனப்பாங்கு இருப்பதும் ஆசிரியர் தமது அறிவு ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்குகளை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதும் சகல ஆசிரியர்களினதும் அறிவு, திறமைகள் மற்றும் மனப்பாங்குகளை வளர்ப்பதற்கான ஊக்கத்துடன் ஒத்துழைப்பை வழங்குவதன் மீதுமாகும்.

(ஈ) ஆசிரியர் தொழிலுக்குத் தேவையான தகைமைகள் இல்லாமையினால் தொழில் ரீதியாக அபகீர்த்தி ஏற்படுவதன் காரணமாக ஆசிரியரினால் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துகொள்ளல் மற்றும் சகோதர ஆசிரியர்களின் சேவைசார் அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்தல்.

(உ) தேவையான தகைமைகள் மற்றும் திறமைகள் இல்லாத ஆசிரியர்களின் தரத்தை உயர்த்துவது தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதனால் அவர் தகைமையை பூர்த்தி செய்யும் வரை பதவி உயர்வுகளை எதிர்பார்க்காதிருத்தல் மற்றும் தகைமை வாய்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

(ஊ) தமது தொழில்வாண்மை சம்பந்தமாக பெருமையுடனும் நல்ல உணர்வுடனும் நடவடிக்கை மேற்கொள்ளல்.

(எ) சகல மாணவர்களுக்கும் தரமான கல்வியைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்தல்.

(ஏ) தமது தனிப்பட்ட மற்றும் தொழில்சார் நோக்கம் அல்லது பயனுக்காக மாணவர் சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அல்லது அவர்களின் எதிர்காலத்திற்கு பாதகமான வகையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இருந்து தவிர்ந்துகொள்ளல் மற்றும் அவ்வாறான பாதகமான / முறைசாரா நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்காதிருத்தல்.

(ஐ) மாணவர்கள் ஏனைய ஆசிரியர்கள், அலுவலர்கள், பெற்றோரின் முன்னிலையில் தம்முடன் சேவையாற்றுபவர்களை விமர்சிக்காது பாடம் மற்றும் பாடத்திற்கு புறம்பான அனைத்து நடவடிக்கைகளின்போதும் நிறுவனத்திற்குள்ளும் மற்றும் அதற்கு வெளியேயும் நல்ல ஒத்துழைப்புடனும் கூட்டான அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொள்ளல்.

(ஒ) அடுத்துவரும் ஆண்டின் நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் வாய்மூலமான தகவல்களை முறையானவாறு தமது பதிலாளுக்குப் பெற்றுக்கொடுத்தல்.

(ஓ) தொழிலின் கௌரவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற முறையற்ற நிலைமைகள் உருவானவுடன் அவற்றை உரிய அதிகாரிகளுக்கு அறிக்கையிடல்.

(7) *ஆசிரியர் முகாமைத்துவத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய ஒருவர் என்றவகையில்,*

(அ) தமது தொழிலில் தாக்கம் செலுத்துகின்ற சட்டங்கள், விதிகள், உயர் முகாமைத்தவம் தொடர்பில் தமக்குரித்தான பொறுப்புக்கள் பற்றி அறிந்திருத்தல்.

(ஆ) பாடசாலை மற்றும் சம்பந்தப்பட்ட கொள்கைகளை தயார்செய்தல் மற்றும் அமுல்படுத்த உதவுதல்.

(இ) முகாமைத்துவ ஆலோசனைகளை பின்பற்றல் மற்றும் சிக்கலான சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமாக முறையாகவும் அமைதியாகவும் கேள்விகளை கேட்டல்.

(ஈ) தமது தொழில்சார் நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகள் தொடர்பில் அந்நியோன்னிய மதிப்பை ஏற்படுத்திக்கொள்ளல்.

(உ) சகல உத்தியோகபூர்வ நடவடிக்கைகளையும் உரிய அதிகாரிகள் மற்றும் உரிய வழிமுறைகள் ஊடாக நியாயமாக நிறைவேற்றிக்கொள்ளல்.

(8) *சமூகத்தின் மற்றும் தேசத்தின் முன்னோடியாக,*

ஆசிரியர் எப்பொழுதும் சமூகத்தினதும் தேசத்தினதும் முன்னோடியாக காணப்படுவதுடன்,

(அ) சமூக சிக்கல்களை இனங்காணல் மற்றும் மேற்படி சிக்கல்களினால் உருவாக்கப்பட்டுள்ள சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தி நாட்டுப்பற்றுமிக்க சிறுவர் பரம்பரையை சமூகத்திற்கு உரித்தாக்கிக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

(ஆ) பல்வேறு இனப்பிரிவினர், சமய மற்றும் மொழிப்பிரிவினர்களுக்கிடையே சமாதானத்தைக் கட்டியெழுப்பக்கூடிய வகையில் மாணவர்கள் மத்தியில் நல்ல சிந்தனைகள் மற்றும் தார்மீக பண்புகளை விதைப்பதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

(இ) தமது பாடசாலை, சமூகம், நாடு மற்றும் தேசத்திற்கு பற்றுமிக்கவராக நடவடிக்கை மேற்கொண்டு தமது மாணவர்களையும் அவ்வழியில் பயணிக்கச் செய்தல்.

**34. ஆசிரியர் ஒழுக்கநெறிக் கோவைக்கு முரணாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் வடமத்திய மாகாண ஒழுக்காற்று நடைமுறைகள் அல்லது அரசாங்கத்தின் தாபன விதிக்கோவையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.**

**35. ஆசிரியர் நன்னடத்தை, ஒழுக்கம் மற்றும் நல்ல நடைமுறைகளைக் கொண்ட ஆளொருவராக ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற சமூக எதிர்பார்ப்புகளுக்கு அமைய அவர் பின்வரும் கட்டகைளை பின்பற்றி நடத்தல் வேண்டும்.**

(அ) மதுபானசாலைகள் மற்றும் சூதுவிளையாட்டு இடம்பெறுகின்ற அபகீர்த்திக்கு உள்ளாகின்ற இடங்களுக்குச் செல்லக்கூடாது.

(ஆ) மதுபானம், புகைபிடித்தல், போதைவஸ்து பயன்பாட்டுக்கு அடிமையான ஆளொருவராக அபகீர்த்தி கிடைக்கும் வகையில் நடந்துகொள்ளக்கூடாது.

(இ) எல்லா சந்தர்ப்பத்திலும் ஒழுக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதுடன் நல்ல சொற்களை பயன்படுத்திப் பேச வேண்டும்.

(ஈ) பணத்தை வட்டிக்கு வழங்குதல் உடல் சுகாதாரம் மற்றும் சமூக நல்ல நிலைத்திருத்தலுக்கு பாதகமான வகையில் வாழ்வாதாரங்கள் அல்லது நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

(உ) மோதல்களை தீர்த்துவைத்தல், மனித உரிமைகள், சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகள் தொடர்பான கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும் என்பதுடன் சிறுவர்களை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தல், அவர்களை துஷ்பிரயோகத்திற்கு மற்றும் துர்நடத்தைக்கு ஆளாக்குதல் போன்ற மேற்படி கோட்பாடுகளை மீறக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்பதுடன் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் கூடாது.

**36. பாடசாலை மாணவர்கள் தொடர்பாக பெற்றோரின் இடத்தை ஆசிரியர்கள் வகிப்பதன் காரணமாக எல்லா சந்தர்ப்பத்திலும் ஒரு மாணவருக்கு அல்லது மாணவர்களுக்கு விசேடமான வகையில் நடந்துகொள்ளக்கூடாது என்பதுடன் எந்தவொரு பேதமும் இன்றி சகலருக்கும் நியாயமாக கவனிப்பதும் மேலதிக கவனம் அவசியமானவர்களுக்கு விசேட கவனம் செலுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

**37. ஆசிரியர் அறிவு வழங்குபவர் என்ற வகையில் திறமைகள் மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்பவர் என்ற வகையில் அறிவைப் பெற்றுக்கொடுத்தல், மனப்பாங்கு மற்றும் திறமைகளை வளர்ப்பதை தமது முக்கிய பொறுப்பாக கருதி பின்வரும் விடயங்களை மிகவும் கவனமாக பின்பற்றல் வேண்டும்.**

I. தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நல்ல முறையில் ஆயத்தமாதல்.

II. வழங்கப்படுகின்ற அறிவு, திறமை, மனப்பாங்கு சரியானதாக உள்ளமை மற்றும் ஏற்புடையதாக உள்ளமை, பயன்படுத்தப்படுகின்ற முறையியல்கள் மாணவர்களுக்கு வயது மற்றும் தன்மைகளுக்கு அமைய பொருத்தமானதாக உள்ளமையை உறுதிசெய்தல்.

III. பாடசாலையினுள் மற்றும் அதற்கு வெளியே கற்பித்தல் கற்றுக்கொள்ளும் செயன்முறையின்போது மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பூரணமாக உறுதிப்படுத்தல்.

IV. மேலதிக தகவல்கள் மற்றும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளும் முறையியல்களை அறிந்துகொள்ள எதிர்பார்க்கின்ற மாணவர்கள் தம்மிடம் எந்த தடையும் இன்றி வருகை தருவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

V. நேரடியாக அல்லது மறைமுகமாக தமது பாடம் அல்லது பாடத்தில் உள்ளடங்கும் விடயங்கள் மாணவர் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான விடயங்கள் தவிர வேறு அநாவசியமான விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுவதிலிருந்து தவிர்ந்துகொள்ளல்.

**38. அதிபரின் கட்டாயமான பொறுப்புக்கள் :**

I. ஆசிரியர்களுக்கு கால அட்டவணையை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களை கண்காணிப்புச் செய்வதை நேரடியாக மற்றும் பாடசாலையின் பிரதி அதிபர்களின் ஊடாக மேற்கொள்வது அதிபரின் பொறுப்பாக இருக்கும்.

II. பாடசாலை நேரத்திற்குள் உச்சளவாக கற்பித்தல், கற்றுக்கொள்ளும் செயன்முறையில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதற்கு அதிபர் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

III. கோட்டம், வலயம், மாகாணம், தேசிய மட்டத்திலான போட்டிகளுக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவது ஆகக்குறைந்தது போட்டிகள் ஆரம்பமாவதற்கு ஒரு பஞ்சாங்க மாதத்திற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டும். அதற்கான முறையே அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

IV. பாடசாலை நேரத்தினுள் வெளி வைபவங்களுக்கு மாணவர்களை பங்கேற்கச் செய்தல் மற்றும் வெளி வைபவங்களை பாடசாலைக்குள் நடாத்துவதற்கு இடமளிப்பது மாகாண கல்விச் செயலாளரின் முறையான அங்கீகாரத்துடன் அன்றி மேற்கொள்ளப்படக்கூடாது.

V. பாடசாலை நடைபெறுகின்ற நாட்களில் முறையானவாறு தனியார், அமய, உத்தியோகபூர்வ லீவு பெற்றுக்கொள்ளாது கடமை நேரத்தில் பாடசாலையிலிருந்து வெளியே செல்லக்கூடாது.

VI. தவணை குறிப்புக்கு அமைய பாடவிதானங்களை பூர்த்தி செய்வது தொடர்பாக அதிபர் தனிப்பட்ட வகையில் பொறுப்புக்கூற வேண்டும். ஆசிரியர்களின் ஊடாக அதனை நிறைவேற்றிக்கொள்வது அதிபர்களின் பொறுப்பாக இருக்கும்.

VII. பாடசாலைக்கு அமைச்சு வழங்கியுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள், அதிபர் மற்றும் கல்விசாரா பதவியணியினரின் ஒழுங்கமைப்புக்கு ஏற்ப தேவையாகின்ற பதவியணி மாத்திரம் பாடசாலையில் வைத்திருப்பது அதிபரின் பொறுப்பாகும் என்பதுடன் மேலதிக பதவியணியினர் இருப்பின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வேண்டும். மேலதிக பதவியணியினரை முறையான இடங்களுக்கு இணைப்புச் செய்வதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

VIII. பாடசாலைக்குள் மேலதிக பதவியணியினர் இருப்பின் அதனை சமப்படுத்தாமை தொடர்பாக குறித்த பாடசாலையின் அதிபருக்கு, கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரும் மாகாணக் கல்விச் செயலாளரும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

IX. தமக்கு உரிய கால அட்டவணையின்றி ஏதேனும் ஒரு பாடசாலையில் ஆசிரியர் தங்கியிருப்பது ஒழுக்காற்று அடிப்படையில் மற்றும் சட்டரீதியாக தண்டனை பெறக்கூடிய விடயமாக இருக்கின்றது என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

X. கல்விசார் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிய ஆசிரியர்கள் அல்லது அதிபர்கள் வலய மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங்களில் தடுத்துவைத்திருப்பதை எவ்வகையிலும் மேற்கொள்ளக்கூடாது என்பதுடன் ஏதேனும் ஒரு பணிக்காக அவ்வாறு தடுத்து வைத்திருப்பின் அதற்கு மாகாணக் கல்விச் செயலாளரின் முறையான எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

XI. கல்விசார் பதவியணி மற்றும் கல்விசாரா பதவியணியினரும் தொழில்சார் கௌரவத்தை பாதிக்கக்கூடிய வகையில் அழைக்கப்பட மற்றும் கடமைகள் பொறுப்பளிக்கப்பட வேண்டும்.

*39. ஏதேனும் ஒரு காரணத்தினால் கல்விசாரா பதவியணி ஊழியர்கள் வலயக் கல்வி அலுவலகங்கள் அல்லது வேறு அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்யப்படக்கூடாது.*

*40. கல்விசாரா பதவியணியினரில் சேவையாற்றுகின்ற பெண்கள், மகளிர் உரிமைக்கு பாதிப்பு ஏற்படுகின்ற வகையில் சேவையில் ஈடுபடத்தக்கூடாது.*

*41. கல்விசாரா பதவியணியினரில் உள்ள இரசாயன ஆய்வுகூட உதவியாளர்கள் இரசாயன ஆய்வுகூடங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.*

A **படிவம்**

**ஆசிரியர் சேவையின் இடமாற்றம் கோரும் விண்ணப்பப் படிவம் - வடமத்திய மாகாணம்**

(மாகாணங்களுக்கு இடையிலானதாயின் 5 பிரதிகள், வலயங்களுக்கு இடையிலாயின் 3 பிரதிகள், வலயத்திற்குள்ளாயின் 2 பிரதிகள் என்ற வகையில் சமர்ப்பித்தல் வேண்டும்.)

இடமாற்றல் இல. : [ ]

**அலுவலக உபயோகத்திற்கு :**

ஆசிரியர் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை [ ]

முன்னுரிமைப் பட்டியலில் உங்களின் எண்ணிக்கை [ ]

....................................

வலய/ மாகாண முன்னுரிமைப் பட்டியலில் உங்களின் இல. [ ]

1. முழுப் பெயர் (சங்கைக்குரிய/திரு./திருமதி/செல்வி) :....................................................

..........................................................................................................................

2. சம்பளப் பதிவேட்டில் உள்ள பெயர் (சங்கைக்குரிய/திரு./திருமதி/செல்வி) :

..........................................................................................................................

3. பாடசாலையும், அதன் முகவரியும் :...........................................................................

.................................................................. தொலைபேசி இல. :...................................

4. சொந்த முகவரி இல. :..................................................................................................

தொலைபேசி இல. .................

5. ஆசிரியர் வகை :......................... கற்பிக்கும் பாடம் :.................. பால் :................

6. பாடசாலை உரித்தான கல்வி வயம் :........................ மாவட்டம் :............................

7. தாம் வசிக்கின்ற பிரதேச செயலாளர் பிரிவு :...................... மாவட்டம் :...............

8. இடமாற்றம் கோரும் மாகாணம் :.............................. தற்போதுள்ள வலயம் :..........

9. பிறந்த திகதி :............... 20............. 12.31 ஆம் திகதிக்கு வயது ஓய்வுபெறவுள்ள திகதி :............

10. முதல் நியமனத் திகதி :........................ நியமனம் பெற்ற மாவட்டம் :.....................

உரித்தான வலயம் :..................................

11. ஆசிரியர் தற்போது உரித்தான வகுப்பும் தரமும் (3-II/3-1/2-II/2-I/1) குறிப்பிடுக

12. கல்வி லீவு மற்றும் சம்பளமற்ற லீவு பற்றிய விபரம் :

| கல்வி லீவு பெறக் காரணமாக பாடநெறி/ நிறுவனம் | திகதி முதல் | திகதி வரை | மொத்த லீவுக் காலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| சம்பளமற்ற லீவு பெற்றதற்கான காரணம் | | | அண்மித்த மூன்று வருடங்களில் பெற்ற சம்பளமற்ற லீவுகள் | | |
| | | | முதல் | இரண்டாவது | மூன்றாவது |
| | | | | | |

(சம்பளமற்ற லீவு மேலதிகமாக இருப்பின் மொத்த நாட்களின் எண்ணிக்கையை இதன் மொத்த லீவுக் காலத்தின் ஒரு பகுதியாகக் குறிப்பிடுக)

13. முதல் நியமனத்திற்கு அமைய முதல் பாடசாலையில் சேவைக்கு இணைந்த சேவைக் காலம்

................... வேறு நியமன நிபந்தனைகள் ................................................................................

..............................................................................................................................................

14. சேவைக் குறிப்பு.- தற்போதைய பாடசாலைக்கு நியமனம் பெற்ற திகதி .......... அதன் முழு சேவைக் காலம் ........................ வட மத்திய மாகாண சேவைக் காலம் .........................................

| பாடசாலையும், முகவரியும் | மாவட்டம் | வலயம் | கோட்டம் | முதல் | வரை | பாடசாலை வகை | பெற்றபின் தங்கிய பிரதேசக் கொடுப்பனவு | புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

தற்போது பயன்படுத்திக் கொள்ளப்படுகின்ற பாடசாலை வகைப்படுத்தலுக்கு அமைய பாடசாலை வகையைக் குறிப்பிடுக (மிகவும் விருப்பத்திற்குரிய/விருப்பத்திற்குரிய/விருப்பத்திற்குரியதல்லாத/பின்தங்கிய/மிகவும் பின்தங்கிய) எனக் குறிப்பிடுக (5%, 10%, 15% என)

15. சிவில் அந்தஸ்து :

| வாழ்க்கைத் துணையின் பெயர் | வசிக்கும் முகவரி | சேவைநிலையத்தின் முகவரி |
|---|---|---|
| | | |

16. 12 வயதிற்குக் குறைவான பிள்ளைகள் பற்றிய விபரம் :

| பெயர் | வசிக்கும் முகவரி | வயது | கற்கும் பாடசாலை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகள் 4 ஐ இணைக்க வேண்டும்)

17. திருமணமாகாதவர் எனின் தாய், தந்தையரின் தகவல்கள் (உங்கள் பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட 4 பிரதிகளை இணைக்க வேண்டும்)

| பெயர் | முகவரி | பிறந்த திகதி | 20....12.31 இற்கு வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

.................................
.................................
.................................
.................................
.................................
.................................
.................................
.................................
.......................

பரிசீலிக்கப்பட்ட இடமாற்றல் குழுப் பிரதிநிதிகளின் சுருக்கக் கையொப்பங்கள் (ஆசிரியர் சங்கத்தையும் குறிப்பிடுக)

18. **இடமாற்றம் கோருவதற்கான காரணம் :**

(கணவர், மனைவி என்பது காரணமாயின் விவாகச் சான்றிதழ், பிள்ளைகளாயின் பிறப்புச் சான்றிதழ்,பெற்றோர் தொடர்பாக எனின், உங்களின் பிறப்புச் சான்றிதழ், உண்மைப் பிரதி என்று உறுதிசெய்து இணைத்தல் வேண்டும். தாம் /தாய் /தந்தை/ வாழ்க்கைத் துணை நோயுள்ள நிலையில் இடமாற்றம் கோரும் பட்சத்தில் சிகிச்சை பெறும் அட்டையை இணைத்தல் வேண்டும்.

உங்களின் முதல் நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்கவும்.

(உங்களின் தகவல்கள் விரிவாக சமர்ப்பிப்பதற்கு இடவசதி போதியதாக இல்லை எனின் அதற்குரிய பந்தி இலக்கத்துடன் வேறொரு தாளில் எழுத்தி இணைக்கவும். (அதனை உரிய அலுவலர் சான்றுப்படுத்தல் வேண்டும்)

இம்முறை தொடக்கம் வடமத்திய மாகாணத்தில் இடமாற்றம் செய்யப்படுவது மாகாண இடமாற்றக் கொள்கையின் கீழாகும். உரிய திகதி அல்லது அதற்கு முன்னர் உங்களின் விண்ணப்பப்படிவத்தை அதிபரிடம் கையளிக்க வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தயவுடன் கவனத்தில் கொள்ளவும்.

| *அலுவலக உபயோகத்திற்கு :* | |
|---|---|
| வடமத்திய மாகாண ஆசிரியர் இட மாற்றக் கொள்கைக்கு அமைய பாடசாலைகளுக்கு உரித்தாகும் புள்ளிகள் | |
| திம்புலாகல, கெபித்திகொல்லேவ கல்வி வலயம் மற்றும் மெதிரிகிரிய, விலச்சிய, கல்விக் கோட்டங்களுக்கு ஒரு வருடத்திற்கு | |
| மிகப் பின்தங்கிய | 6 |
| பின்தங்கிய | 5 |
| ஏனைய பாடசாலைகள் | 4 |
| மேலுள்ள பிரதேசமல்லாத பாடசாலைகளுக்கு ஒரு வருடத்திற்கு | |
| மிகப் பின்தங்கிய/ பின்தங்கிய | 4 |
| விருப்பத்திற்குரியதல்லாத | 3 |
| விருப்பத்திற்குரிய | 2 |
| மிக விருப்பத்திற்குரிய | 1 |
| சேவைக் காலம் | |
| ஒருவருடத்திற்கு | 1 |
| விவாகத்திற்கு | 2 |
| ஏழு வயதுக்கு குறைவான ஒரு பிள்ளைக்கு | 2 |
| முன்னைய சேவைக் காலம் | |
| வட, கிழக்கு எனின் ஒரு வருடத் திற்கு | 1 |
| வடகிழக்குக்கு இடமாற்றம் கோருவதாயின் புள்ளிமுறைக்கு புறம்பாக நியமனக் கடிதத்தின் நிபந்தனைகளை மீறாதவாறு சேவைக் காலத்திலிருந்தும் புறம்பாக வழங்கப்படும். | |
| புள்ளித் திட்டத்திற்குப் புறம்பாக சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு மாகாணத்திலிருந்து விடுவிக்கும்போது பத்து வருட சேவைக் காலம் இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். | |

19. இடமாற்றம் கோரும் மாகாணம் :

இடமாற்றம் கோரும் பாடசாலையைவிருப்பத்தின் அடிப்படையில் 5 ஐப் பெயரிடுக :

| *பாடசாலை* | *முகவரி* | *பாடசாலை வகை* | *மாவட்டம்* | *கல்வி வலயம்* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

உத்தேசித்துள்ள பாடசாலைகளில் இல்லை எனின் கோரியுள்ள கோட்டத்தில் வேறு எந்தவொரு பாடசாலைக்கும் இடமாற்றம் பெறுவதற்கு விரும்புகின்றீரா? .............................

திகதி :- ....................................                ............................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

**அதிபரின் அறிக்கையினை உரிய சுற்றறிக்கைக்கு அமைய அதிபர் பூர்த்தி செய்தல்**

| *மாணவர் எண்ணிக்கை* | | | *விண்ணப்ப தாரரின் பாடத்திற்கு அமைய ஆசிரியர்களின் எண்ணிக்கை* | | *இந்த வகையிலான இட மாற்றம் கோரியுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை* | | *உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை* | |
|---|---|---|---|---|---|---|---|---|
| *தரம்* | *வகுப்புக்களின் எண்ணிக்கை* | *மொத்த மாணவர் எண்ணிக்கை* | | | | | | |
| 1-5 | | | அங்கீரித்தது | | மாகாணங்களுக்கு இடையிலான | | அங்கீகரித்தது | |
| 6-11 | | | உள்ளது | | வலயங்களுக்கு இடையிலான | | உள்ளது | |
| 12-13 | | | குறை | | வலயத்திற்குள் | | குறை | |
| மொத்தம் | | | மிகை | | மொத்தம் | | மிகை | |

இந்த ஆசிரியரின் இடமாற்றம் கிடைக்கும் பட்சத்தில் பாடசாலையில் ஏற்படுகின்ற வெற்றிடம்

இடமாற்றம் வழங்குவதன் மூலம் வேலைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் / முடியாது. இந்த வகையிலான பாடசாலையிலிருந்து விடுவிக்க முடிவது ...... ஆசிரியர்களை மாத்திரமாகும்.

..................................................................................................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்று உறுதி செய்கின்றேன். இடமாற்றத்தை சிபாரிசு செய்கின்றேன் / செய்வதில்லை.

| ............................................ | ................................... | ...................................... |
|---|---|---|
| திகதி | பதவி முத்திரை | அதிபர் |

## கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு

வலயத்தில் இந்தவகையிலான இருக்கவேண்டியஆசிரியர்களின் எண்ணிக்கை ........................

இந்த வகையில் தற்போது உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை ...............................

இடமாற்ற விண்ணப்பத்தைக் கையேற்கும் இறுதித் திகதியில்,

வலயத்திற்கு வெளியே இடமாற்றம் கோரியுள்ள இந்த வகையிலான ஆசிரியர்களின் எண்ணிக்கை ........................

ஆவணக் கோப்புக்குப் பொறுப்பான எழுதுநரின் பெயர் ........................................... கையொப்பம் .........................

ஆசிரியர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் அவரின் ஆவணக் கோப்பின் மூலம் உறுதிசெய்யப்படுகின்றது. தவறான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அதிபர் பூர்த்தி செய்துள்ள தகவல்கள் சரியானவை என்றும் அறியத்தருகின்றேன்.

திகதி .................. பதவி முத்திரை ...................... வலயப் பொறுப்பு பி.க.ப. கையொப்பம் ..................

## ஆசிரியர் இடமாற்றல் குழுவின் சிபாரிசு

உரிய புள்ளிகளைப் பூர்த்தி செய்துள்ளதனால் / மனிதாபிமான காரணங்களின் அடிப்படையில் / மருத்துவக் காரணங்களினால் / மிகையாக உள்ளதனால் இடமாற்றத்தை அங்கீகரிக்கின்றேன் / அங்கீகரிப்பதில்லை.

உறுப்பினர்களின் கையொப்பம் (ஆசிரியர் சங்கத்தைக் குறிப்பிடுக)

| | | |
|---|---|---|
| 1. ..................................... | 2. .................................... | 3. .................................. |
| 4. ..................................... | 5. .................................... | 6. .................................. |
| 7. ..................................... | 8. .................................... | 9. .................................. |

திகதி .........................................

பதவி முத்திரை ......................

| | |
|---|---|
| ...................................................... | .......................................................... |
| இடமாற்றல் குழு செயலாளரின் கையொப்பம் | இடமாற்றக் குழு தவிசாளர்/ மாகாண கல்விப் பணிப்பாளர் கையொப்பம் |

## மாகாண கல்வி அமைச்சுச் செயலாளரின் சிபாரிசு (மாகாணங்களுக்கு இடையிலானவைகளுக்கு)

ஆசிரியர் இடமாற்றல் குழுவின் சிபாரிசுக்கு அமைய இடமாற்றத்தை சிபாரிசு செய்கின்றேன்/ செய்வதில்லை.

| | | |
|---|---|---|
| ..................... | ..................... | ..........................................., |
| திகதி | பதவிமுத்திரை | மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரின் கையொப்பம். |

## மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு (மாகாணங்களுக்கு இடையிலானவைகளுக்கு)

செயலாளர்,

......................................................................... மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

இந்த ஆசிரியரை வடமத்திய மாகாணத்திலிருந்து விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவரை உங்கள் மாகாண அரசாங்க சேவைக்கு இணைப்புச் செய்துகொள்ள இணங்குகின்றீரா என்பதை எனக்கு அறித்தருமாறு கோருகின்றேன்.

| | | |
|---|---|---|
| ...................... | .................................... | ............................................... |
| திகதி | பதவி முத்திரை | அரசாங்க சேவைகள் ஆணைகுழுவின் செயலாளர். |

B படிவம்

**இடமாற்ற தகவல் படிவம் - கல்விஅமைச்சு, வடமத்திய மாகாணம்**

1. ஆசிரியரின் பெயர் :..................................

2. முதல் நியமனத் திகதி :..................................

3. ஆசிரியர் வகை :................................. தரம் :........................ பாடம் :......................

(உதா. 3 (i) அ –விஞ்ஞானம்)

4. திருமணமானவர்/திருமணமாகாதவர் :..................................

5. வாழ்க்கைத் துணையின் பெயர் மற்றும் சேவைநிலையம் :..................................

6. பிள்ளைகளின் எண்ணிக்கை :..................................

7. சேவையாற்றுகின்ற பாடசாலை :.................................. வலயம் :..................................

8. முன்னைய சேவைத் தகவல்கள் :-

| | சேவையாற்றிய பாடசாலை | ......... முதல் ......... வரை |
|---|---|---|
| (1) | ...................................................................................... | ................................... |
| (2) | ...................................................................................... | ................................... |
| (3) | ...................................................................................... | ................................... |
| (4) | ...................................................................................... | ................................... |
| (5) | ...................................................................................... | ................................... |
| (6) | ...................................................................................... | ................................... |
| (7) | ...................................................................................... | ................................... |
| (8) | ...................................................................................... | ................................... |

9. இடமாற்றம் கோரும் மாகாணம்/வலயம்/பாடசாலை :............................................

10. இடமாற்றம் கோருவதற்கான காரணம் :............................................

11. இடமாற்றம் கோருவதற்காக வருகைதந்துள்ள தடவைகளின் எண்ணிக்கை :............................................

.............................................,
ஆசிரியரின் கையொப்பம்.

திகதி :..........................

---

அதிபரின் சிபாரிசு :

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளது | குறைவு | மிகை |
|---|---|---|---|---|
| பாடசாலைக்குரிய தேவையான ஆசிரியர் களின் எண்ணிக்கை | | | | |
| பாடத்திற்கு ஏற்புடைய மொத்த ஆசிரியர் களின் எண்ணிக்கை | | | | |

இடமாற்றத்தை சிபாரிசு செய்கின்றேன் / செய்வதில்லை.

திகதி :................ அதிபரின் கையொப்பமும், பதவி முத்திரையும் :.................................................

கோட்டக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு :-

| | *அங்கீகரிக்கப்பட்டது* | *உள்ளது* | *குறைவு* | *மிகை* |
|---|---|---|---|---|
| கோட்டத்திற்குரிய தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | |
| பாடத்திற்கு ஏற்புடைய ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | |

இடமாற்றத்தை சிபாரிசு செய்கின்றேன்/செய்வதில்லை.

திகதி :.............. கோட்டக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும், பதவி முத்திரையும் :.................

வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு :-

| | *அங்கீகரிக்கப்பட்டது* | *உள்ளது* | *குறைவு* | *மிகை* |
|---|---|---|---|---|
| வலயத்திற்குரிய தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | |
| பாடத்திற்கு ஏற்புடைய ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | |

மேலுள்ளதகவல்களுக்குஅமையஇடமாற்றத்தைசிபாரிசுசெய்கின்றேன் /செய்வதில்லை.

திகதி :.............. வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும், பதவி முத்திரையும் :............

இடமாற்றம் பெற்றுச்செல்ல உத்தேசித்துள்ள பாடசாலை அதிபரின் சிபாரிசு :

| | *அங்கீகரிக்கப்பட்டது* | *உள்ளது* | *குறைவு* | *மிகை* |
|---|---|---|---|---|
| வலயத்திற்குரிய தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | |
| பாடத்திற்கு ஏற்புடைய ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | |

உரிய பாடத்திற்கு வெற்றிடம் காணப்படுகின்றது என்பதை சிபாரிசு செய்கின்றேன் /செய்வதில்லை.

திகதி :.............. அதிபரின் கையொப்பமும், பதவி முத்திரையும் :.................

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரம் :

.................................... ஆம் திகதிமுதல் / உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ........................ வலயத்தின் ....................
......................................................... வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற அங்கீகரிக்கின்றேன்.
............................................................................................ இடமாற்றத்தை அங்கீகரிப்பதில்லை.

திகதி :.............. மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும், பதவி முத்திரையும் :............

*10-43*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.